வினாக்கள்-விடைகள்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் திட்டம் என்று சொல்லுகின்ற பொழுது அணை கட்டுவது போன்ற காரியங்களை நாம் ஆரம்பிக்க வேண்டும். அப்படி ஆரம்பித்து தண்ணீரை நாம் அதில் அதிக அளவு தேக்கி வைக்கப் போவதில்லை. இந்தப் பக்கம் எடுக்கப் போகிறோம் என்றால் அந்த அணை கூட பயன் இல்லாமல் போகும். ஆகையினால் திட்டங்களை மாற்றியமைக்கின்ற சூழ்நிலை உருவாகும். ஓரளவிற்கு இதிலே இரு அரசுகளும் ஒரு சுமூக முடிவை நோக்கி வந்துக் கொண்டிருக்கின்றன. கடைசியிலே கேரள பவானியோடு சேர்த்து இந்தப் பிரச்சினை பேச வேண்டுமானால் இதிலே சிரமம் இருக்கிறதே தவிர வேறு அல்ல. விரைவிலே ஒரு தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு உண்டு.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நடத்திய பேச்சுக்களில் கேரள அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அதனுடைய அணுகுமுறை நமக்கு சாதகமாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு நெல்லித்துறை திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே புல்லூரிலிருந்து நீர் மின் நிலையத்திலிருந்து வெளி வருகின்ற நீரும் பவானிசாகருக்கு வருகின்ற நீரைத்தான் நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதிலே நாம் பெற்று வருகின்ற நீரைக் கொண்டு ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதில் என்ன தடை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நெல்லித்துறைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அதை வற்புறுத்தித்தான் நாம் மத்திய அரசுக்கு எழுதி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அனுமதி தரவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இந்த பாண்டியாறு, புன்னம்புழா திட்டத்தைப் பொறுத்தவரையில் இரு அரசுகளுடைய, அணுகு முறை ஒத்ததாக உள்ளது.

சாலையோர மரங்கள் வனத்துறை மூலம் பராமரிப்பு.

776—(*வினா எண் 3420) **திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைத்துறை சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் இருபுறமும் சிசு, தேக்கு, யூகலிப்டஸ் மரக்கன்றுகள் நட்டு வனத்துறை மூலமாக பராமரித்து பாதுகாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை. நெடுஞ்சாலைத்துறை மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் இருபுற

மும் நிழல் அல்லது பலன் தரும் மரங்கள் நட்டு பராமரிக்கும் திட்டத்தை வனத்துறையும் மேற்கொண்டு வருகிறது.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தினுடைய சாலைகள் பூராவும் வரப்பாக இருக்கிறது. இந்தச் சாலைகள் பெரும்பாலும் ஆற்றின் கரையிலே அமைந்திருக்கின்றன. எனவே, ஆற்றினால் ஏற்படுகின்ற அந்த அரிப்பை தடுப்பதற்காகவும் அதே சமயத்தில் பருவ மழையைத் தேக்கி வைத்துக் கொள்ளவும் தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற அந்தச் சாலைகளுடைய இருபக்கமும் மரங்களை நடும் திட்டம் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 1981–82 முதல் 1985–86 வரை தமிழகத்தில் 3,028 கிலோ மீட்டர் நீளத்திற்கு இத்தகைய சாலையோரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு உள்ளன. இதைத் தவிர மற்றும் பல துறைகளின் வாயிலாகவும் இந்த மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆனால், இந்தச் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தினுடைய இரண்டாவது பகுதியிலே சுமார் 800 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலையோர மரங்கள் நடவேண்டும் என்ற திட்டமும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் ஏற்கெனவே இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இனி எதிர்காலத்திலும் இத்தகைய திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

சிவகங்கை தேவஸ்தானத்திற்குச் சொந்தமான இடங்கள்.

777—(*வினா எண் 4905) திரு. க. பாரமலை: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தேவஸ்தானத்திற்குச் சொந்தமான திருப்புவனம் புஷ்பகேஸ்வரர் சௌந்தரநாயகி அம்மன் கோவிலைச் சேர்ந்த தோப்பு மற்றும் தெப்பக்குளம் தோப்பு ஆகிய இடங்களில் தனி நபர்கள் நிரந்தரக் கட்டிடங்கள் கட்ட முயற்சிப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) ஆலய நிலத்தில் நிரந்தரக் கட்டிடங்கள் கட்ட முயற்சிப்பதைத் தடுக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.